# OS.No.185/2024, Dated 12.02.2026

The witness sworn under Oaths Act 1969 on this the day of 12th day of February 2026.

**வா.சா.1 –மாரியம்மாள் க/பெ.கிருஷ்டபிள்ளை வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் ஒழப்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கிருஷ்டப்பிள்ளை என்பது எனது தகப்பனாரின் பெயர் ஆகும். எனது கணவருக்கும் அதே பெயர் தான். 2, 3 வாதிகள் எனது உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். பார்வதியை வெங்கனம் கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். பிரபாவதியை ஒழப்பாக்கத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். ஆனால் அவர் சென்னைக்கு சென்று விட்டார். எனது தகப்பனார் சொத்தில பாகம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களில் எனது தகப்பனார் சொத்துக்களும், எனது தாத்தா சொத்துக்களும் உள்ளன. எனது தகப்பனார் எந்தெந்த சொத்துக்கள் வாங்கினார் என்று எனக்கு படிக்க தெரியாத காரணத்தால் தெரியாது. எனது தகப்பானர் கிரையம் வாங்கிய பத்திரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனது தகப்பனார் சுமார் 9 ஏக்கர் கிரையம் வாங்கினார். அந்த 9 ஏக்கர் நிலத்தை யார் யாரிடமிருந்து வாங்கினார் என்று நான் குழந்தையாக இருந்த காரணத்தால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் அவரது வருமானத்தை வைத்து சொத்துக்கள் வாங்கியதாக என்னிடம் சொல்லியுள்ளார். குள்ளபிள்ளை என்பவர் எனது தகப்பனாரின் அப்பா ஆவார். அவருக்கு கொசப்பட்டு தான் சொந்த ஊர் என்றால் சரிதான். எனது தாத்தா குள்ளப்பிள்ளைக்கு அவ்வளவாக சொத்துக்கள் இல்லை. எனது தகப்பனார் தான் சொத்துக்களை வாங்கினார். எனது தாத்தாவிற்கு அவ்வளவாக சொத்துக்கள் இல்லை 40 செண்டு இருந்திருக்கலாம். எனது தாத்தா சொத்துக்கள் கிரையம் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. எனது தாத்தா குள்ளபிள்ளைக்கு நடேசபிள்ளை, தேவராயபிள்ளை, கிருஷ்டபிள்ளை என்ற மூன்று மகன்கள்

என்றால் சரிதான். கொசப்பட்டு கிராமத்தில் எனது தாத்தா குள்ளபிள்ளைக்கு மூன்று ஏக்கர் நிலம் இருந்தது என்றால் எனக்கு அது தெரியாது. கொசப்பட்டு கிராமத்திலிருந்து எனது தாத்தா ஒழப்பாக்கம் கிராமத்திற்கு எனது தாத்தா வந்துவிட்டாரா என்றால் இல்லை. அவர் அதே ஊரில் தான் இருந்தார். கொசப்பட்டு கிராமமும், ஒழப்பாக்கமும் அடுத்தடுத்த ஊர்கள் என்றால் சரிதான். ஒழப்பாக்கத்தில் எனது தாத்தா ஆறு செண்டு கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு அது தெரியாது. அவர் உயிருடன் இருக்கும்போதே தனது மூன்று மகன்களுக்கும், பாகம் பிரித்து கொடுத்து விட்டார் என்றால் சரிதான். கொசப்பட்டிலிருந்த மூன்று ஏக்கர் நிலத்தை தனது முதல் மகன் நடேச பிள்ளைக்கு கொடுத்தார் என்றால் சரிதான். மீதி இருந்த சொத்தை தேவராயபிள்ளை மற்றும் கிருஷ்டப்பிள்ளைக்கு பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். தேவராயப்பிள்ளைக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்றால் சரிதான். அவர் கடைசி வரை எனது தகப்பனார் கிருஷ்டப்பிள்ளையுடன் இருந்தே காலமாகிவிட்டார் என்றால் சரிதான். தேவராயப்பிள்ளையின் சொத்தையும் எனது தகப்பனார் கிருஷ்டப்பிள்ளை எடுத்து கொண்டார் என்றால் சரிதான். எனது தாத்தாவின் செத்தில் எனது தகப்பனாருக்கு ஆறு ஏக்கர் நிலம் கிடைக்கப்பெற்றது என்றால் எனக்கு அது தெரியாது. எனது தகப்பனார் இறந்து 15 வருடங்கள் ஆகிறது. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே வாதிகள் ஆகிய எங்கள் மூவருக்கும் திருமணமாகிவிட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.12 13:55:46 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி